**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Thillai Murugesan |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கத்தில் வசிக்கிறேன். டெய்லராக வேலை செய்கிறேன். 28.01.2023 ம் தேதி கொமரலிங்கத்தில் உள்ள எனது கடைக்கு எதிர்புறம் கட்டிக் கொண்டிருந்த கடை கட்டிடம் விழுந்துவிட்டது. மறு நாள் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் துரைசாமி என்பவர் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் 3 கையெழுத்து பெறப்பட்டதா என்றால் சரியாக தெரியவில்லை 3 கையெழுத்து பெறப்பட்டது. நிரப்பப்படாத தாளில் கையெழுத்து

போட்டேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தை பற்றியோ சம்பவத்தை பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் நான் மறு நாள் கடைக்கு வந்த போது சொன்னார்கள். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை கடையில் வைத்து வாங்கினார்கள். நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கையெழுத்து போட்ட பின்பு காவல் துறையினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.17 18:50:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்